தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 11.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 815/SCIC/2020**

திரு.கு.செந்தில்குமார்
எண்.8/B, மேற்கு தெரு
பெரிய கண்டியன்குப்பம்
விருத்தாச்சலம் - 606 001. ...... புகார்தாரர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
விருத்தாச்சலம் - 606 001. ...... பொதுஅதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 11/03/2024 அன்று ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **இருப்பினும் 23/10/2020 தேதியிட்ட தகவல் கோரும் மனுவிற்கு 28/12/2020 தேதியிட்ட கடிதத்தில் சரியான தகவல்களை வழங்காததற்காகவும் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழ் மனுவினை பிரிவு 6(3)-ன் கீழ் 5 தினங்களுக்குள் மனுவினை மாற்றம் செய்யப்படாததற்கும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிர்)., விருத்தாசலம் திருமதி.செ.ரூபியா பேகம், அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது. மேற்சொன்ன அப்போதைய திருமதி.செ.ரூபியா பேகம், பொதுத்**

தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) விருத்தாசலம் அவர்களிடமிருந்து விளக்கத்தினைப் பெற்று இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பணிக்கப்படுகிறார்.

2. **மேற்குறிப்பிட்டவாறு திருமதி.ச.ரூபியா பேகம், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), விருத்தாசலம் அவர்கள் 13/06/2024 அன்று தனது காரண விளக்கத்தை ஆணையத்தின் முன் சமர்ப்பித்துள்ளார். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

"மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் பெறப்பட்ட மனுவிற்கு, பார்வை (2)-ல் காணும் கடிதம் வழி, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) விருத்தாசலம் அவர்களால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி உரிய காலத்திற்குள் 28/10/2020 அன்று மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டது.

12.11.2020 தேதியிட்ட மனுதாரரின் மேல்முறையீட்டு மனு தொடர்பாக பார்வை (4)-ல் காணும் 02.12.2020 தேதியிட்ட மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் துணைப் பதிவுத்துறைத்தலைவர், கடலூர் அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியபடி, பார்வை (5)-ல் காணும் பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) விருத்தாசலம் அவர்களால் மனுதாரருக்கு 05.12.2020 அன்று உரிய காலத்திற்குள் தகவல் வழங்கப்பட்டது.

23.10.2020 தேதியிட்ட மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவில் 20 ஆவணங்களுக்கான ஒளி நகலினைக் கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவில் சார்பதிவாளர் அலுவலகத்தின் பெயரைக் குறிப்பிடாமல் '**தங்கள் அலுவலகம்**' என பொதுவாகக் குறிப்பிட்டு தகவல் கோரியுள்ளார்.

விருத்தாசலம் பதிவு மாவட்டத்தில் 11 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. மனுதாரர் கோரிய 20 ஆவணங்களின் ஒளி நகல்களை 11 சார்பதிவாளர் அலுவலகத்திலும் சேகரித்து 220 ஆவணங்களாக தொகுத்து வழங்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வழிவகையில்லை என்பதாலும், தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண்.SA7423/SCIC/2018 நாள் 25.03.2019-ன்படி "மனுதாரருக்கு தகவல்களை சேகரித்து தொகுத்து வழங்க வேண்யதில்லை" எனத் தெரிவிக்கப்பட்டதாலும், மனுதாரர் சார்பதிவாளர் அலுவலகத்தின் விவரத்தை மனுவில் குறிப்பிடாத நிலையிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 6(3)-ன் கீழ் மேற்காணும் மனுவினை மாற்ற முகாந்திரம் எழவில்லை என்ற எனது விளக்கத்தினைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

3. **மேற்கண்ட காரண விளக்கத்தை ஆணையம் பரிசீலனை செய்கையில், அதனை பதிவு செய்து, ஏற்கிறது. பொதுத் தகவல் அலுவலர் மீதான ஆணையத்தின் மேல்நடவடிக்கை கைவிடப்படுகிறது. எனவே, புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 815/SCIC/2020</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
விருத்தாச்சலம் - 606 001.

2.திருமதி ச.ரூபியா பேகம்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
விருத்தாசலம் பதிவு மாவட்டம்.

**புகார்தாரர்**

திரு.கு.செந்தில்குமார்
எண்.8/B, மேற்கு தெரு
பெரிய கண்டியன்குப்பம்
விருத்தாச்சலம் - 606 001.

நகல்
பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-600 028.

RG/PC